டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.08.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 051 - Madurai | Online Edition

# வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்க வேளாண் வளர்ச்சி அவசியம்

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் வலியுறுத்தல்

புது தில்லி, ஆக.19

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் 97-வது ஆண்டு பொதுக்கூட்டம் மத்திய வேளாண், விவசாயிகள் நலன், ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தலைமையில் புது தில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் நேற்று (19.8.26) நடைபெற்றது.

அப்போது உரையாற்றிய சிவராஜ் சிங் சௌகான், வேளாண் வளர்ச்சியின்றி, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவு நனவாகாது என்று தெரிவித்தார்.

நாடு வெறும் உற்பத்தியை அதிகரிப்பதோடு மட்டுமின்றி, வேளாண் நிலம் முதல் உலகளாவிய சந்தை வரை வலுவான அடையாளத்தை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு நேரடிப் பயன்களை அளிக்கக்கூடிய ஆராய்ச்சி சூழல் தேவை என்றும் அவர் கூறினார்.

வேளாண் மாற்றத்தின் அடுத்தக் கட்டமாக விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதிலும் குறு, சிறு விவசாயிகளின் எதிர்கொள்ளும் சக்தியை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இத்தகைய சூழலில் ஒருங்கிணைந்த பண்ணை முறைகள், தரமான விதைகள், நடவுப் பொருள்களை உரிய நேரத்தில் பெறுதல், சமச்சீரான உரப் பயன்பாடு, மேம்பட்ட மண்வளம், நீடித்த வேளாண் நடைமுறைகள் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை எடுத்துரைத்தார்.

# வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி




கோயம்புத்தூர், ஆக.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் வேளாண் இணை பேராசிரியர்களுக்கு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி 19.8.26 முதல் 21.8.26 வரை அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியைத் துவக்கி வைத்து பேசிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர் கா.சுப்ரமணியன், வகுப்பறையில் ஆசிரியர்கள் வழங்கும் அறிவு, மாணவர்களின் செயல் திறனாகவும், சமூகப் பயன்பாட்டுக்கான செயல்பாடாகவும் மாற்றப்பட வேண்டும். வகுப்பறையில் உருவாக்கப்படும் சிந்தனைகள் சமூக முன்னேற்றத்திற்கும், செயல்பாட்டிற்கும் பயனுள்ளதாக அமையும் போதுதான், மாணவர்களிடமும், சமூகத்திடமும் தன்னம்பிக்கையை உருவாக்க முடியும் என்றார். அறிவு சார்ந்த கல்வியிலிருந்து ஞானம் சார்ந்த கல்வியை நோக்கி நகர்வதற்கு, ஆசிரியர்கள் தங்களது கற்றல் முறைகளையும், அணுகு முறைகளையும் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்வது அவசியம் என வலியுறுத்தினார். பல்வேறு கோணங்களில் புதிய நுண்ணறிவைத் தேடுவதும், ஆழமான சிந்தனையுடன் கற்றுக்கொள்வதும் எதிர்காலக் கல்வியின் தரத்தை உயர்த்தும் என்றார். கல்வி, ஆராய்ச்சி பணி மட்டுமல்லாது சிறந்த நிர்வாகத்திறனும் ஒருவருக்கு அவசியமாகிறது. எனவே அதைக் கருத்தில் கொண்டு இப்பயிற்சியின் ஒரு பகுதியாக நிர்வாகத் திறன் மேம்பாடு பற்றியும், வழங்கப்பட உள்ளது என்றார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை கல்வி முதன்மையர் (SPGS) முனைவர் ச.பாபுவின் சிறப் புரையில், கற்றல் என்பது வகுப்பறை அறிவுடன் நின்று விடுவதல்ல. கற்றதைச் சிந்தனையாகவும் செயலாகவும் மாற்றுவதே அதன் நோக்கம் என்றார். ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, நமது சிந்தனைத் திறனைச் சுருக்காமல், அதை மேலும் விரிவுபடுத்தும் கருவியாக அமைய வேண்டும். தொழில் நுட்பத்தைச் சார்ந்திருப்பதைத் தவிர்த்து, சுயசிந்தனைக்கும் படைப்பாற்றலுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்.

இதனைக் கருத்தில் கொண்டு, நவீன கற்பித்தல் அணுகு முறைகள், மேம்பட்ட ஆராய்ச்சித் திறன்கள், டிஜிட்டல் கற்பித்தல், இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் அறிவியல் தகவல் தொடர்புத் திறன்களை பேராசிரியர்களுக்கு வழங்கும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், இந்தியக் கல்வி அமைப்பைப் புரிந்து கொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதிப்பாடு, இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, Q1 தர அறிவியல் ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள், செயற்கை நுண்ணறிவு சார்ந்த கற்பித்தல் முறைகள், கல்விசார் செயலிகள், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் ஆகிய தலைப்புகளில் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

வனவியல் துறை பேராசிரியர் மற்றும் (IQAC) ஒருங்கிணைப் பாளர் முனைவர் சு.உமேஷ் கண்ணா வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் (ARM) முனைவர் த.சாம்சாய் நன்றியுரை யாற்றினார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

### 17. துவரம்பருப்பு சூப்

**தேவையான பொருட்கள்**

துவரம்பருப்பு — ½ கப்

தக்காளி — 1

மிளகு – சிறிதளவு

சீரகம் – சிறிதளவு

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

பருப்பை வேக வைத்து தக்காளியுடன் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை




சிவகங்கை, ஆக.19

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், செட்டிகுறிச்சி கிராமத்தில் பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பயிற்சி நடத்தபட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் ஞானவேல், பயிற்சியில் கலந்து கொண்டு கொண்டு முன்னிலை வகித்தார். சி.சேதுபதி, மண்ணியல் வல்லுநர் KVK – குன்றகுடி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். நிலம் தேர்வு விதை தேர்வு பருவங்களுக்கு ஏற்ற இரகம் தேர்வு செய்தல் போன்ற தொழில் நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மற்றும் சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை மண்ணின் வளம் மற்றும் தட்ப வெப்ப நிலை போன்றவற்றிற்கு ஏற்ப தழைசத்து சாம்பல்சத்து மணிசத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதம் சரியான நேரம் மற்றும் சரியான முறைகளில் பயன்படுத்தும் வழிமுறையாகும். மண்வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள் உயிர் உரங்கள் இரசயன உரங்கள் போன்றவற்றை தேவைகேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண் வள அட்டையின் பரிந்துரைகளின் படி பயன்படுத்த வேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும் அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன்பாடுகள் தவிர்க்கபடுவதால் விவசாயிகளுக்கான செலவு குறையும்.

பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுசூழல் பாதிக்கபடாத வகையில் தழைசத்து மண்ணில் அதிகரிக்கலாம் அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியா

சல்பேட் போன்ற தழைசத்து உரங்களின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம், போன்ற தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரித்தல் மற்றும் அதன் பயன்கள் பற்றியும் விதை நேர்த்தி செய்து விதைக்கும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன் படுத்துவதால் மண்ணில் உள்ள தலை மணி மற்றும் சாம்பல் சத்துக்களை பயிர்கள் எளிதாக எடுத்து கொள்ளும் வகையில் மாற்றி தரபடுகிறது. மேலும் பயிர் வளர்ச்சியினை நிலைகளுக்கு ஏற்ப அடி உரம் தூர்கட்டும் பருவம் பூக்கும் பருவம் என பிரித்து உரங்களை இடுவதால் சத்துக்கள் வீணவது என்பது வெகுவாக குறைக்கபட்டு விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்கள் நெல் நுண்ணூட்டம் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள் இலைவண்ண அட்டை போன்ற பொருட்கள் கண்காட்சியாக விவசாயிகள் பார்வைக்கு வைக்கபட்டிருந்தது. உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய்ஆனந்த், பயிற்சிக்கு உண்டான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார் மற்றும் பயிற்சியின் முடிவில் விவசாயி களுக்கு நன்றியினை தெரிவித்தார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நான்கு நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலை முன்னறிவிப்பு

சேலம், ஆக.19

சேலம் மாவட்டம், மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், திட்ட ஒருங்கிணைப்பாளர், இரா.விஜயன், மா.இரவி, பெ.கோகிலா மற்றும் செ.பிரபாகரன் ஆகியோர் கூறியதாவது,

நான்கு நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் நாள்–1 (20.08.26) முதல் நாள்–4 (23.08.26) வரை லேசான மழைக்கும் மற்றும் நாள்–3 (22.08.26) மழையற்றும் காணப்படும். பகல் வெப்பம் 35.0° செ. (95.0° பா)க்கு மிகாமலும், இரவு வெப்பம் 25.0° செ. (77.0° பா) ஆகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீச அதன் வேகம் மணிக்கு 6–8 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 30–80% மாக நிலவும்.

**காய்கறி பயிர்கள்**

வரும் நாட்களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக காய்கறிப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கக்கூடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்பட நிறைய வாய்ப்பு உள்ளது. எனவே இதன் பாதிப்பைக் கட்டுப்படுத்த, மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியை ஒரு ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து அவற்றைக் கண்காணிக்க வேண்டும். மேலும் வேப்ப எண்ணெய் மற்றும் புங்கம் எண்ணெய் ஆகியவை தலா 75 மி.லி மற்றும் காதி சோப்பு திரவம் 20 மி.லி வீதம் ஒரு டேங்கிற்கு கலந்து இலைவழி தெளிப்பாக தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**சின்ன வெங்காயம்**

தற்போது நிலவும் மாறுபட்ட காலநிலையில் விதைக்காக சின்ன வெங்காயம் அறுவடை செய்யும் விவசாயிகள், அவ்வப்பொழுது லேசான மழை மற்றும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதால், வெங்காய குமிழ்களை வெங்காயத் தாள்களுடன் நன்றாக வயல்களில் காய வைத்து பின்பு வெங்காயப் பட்டறையில் சேமிப்பதால் விதை வெங்காயம் வீணாகாமல் தடுக்கலாம். குமிழ்களை உயர்த்தப்பட்ட தளங்கள், மூங்கில்/கம்பி வலைத் தளங்கள் அல்லது உலர் தார்ப்பாய் மீது மெல்லிய அடுக்காகப் பரப்புவது நல்லது.

ஏனெனில், தடிமனான குவியலாக சேமித்தால் நடுப்பகுதியில் வெப்பமும் ஈரப்பதமும் அதிகரித்து அழுகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

**விதைப்பு பருவம்**

மாவட்டம் முழுவதும் நிலவி வரும் கடும் வறட்சியினால் மானாவாரி நிலங்களில் விதைப்பு செய்வதற்கு முன் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விதை அமிர்தம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். இதனால் விதை முளைப்பு திறன், ஆரம்பகால வளர்ச்சி மற்றும் பயிர் நிலைநிறுத்தம் ஆகியவை மேம்பட்டு, வறட்சி காலத்தில் பயிரின் தாங்கும் திறன் அதிகரிக்க உதவுகிறது. மேலும் இதனை உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறுவகை பயிர்களுக்கு ஒரு கிலோ விதைக்கு 10 மி.லி, நிலக்கடலை மற்றும் பருத்திக்கு 11 மி.லி என்ற அளவில் விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின்பு விதைக்கவும். இதனுடன் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க மூடாக்கு அமைத்தல் போன்ற முறைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

**மஞ்சள்**

தற்போது சில இடங்களில் நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக மஞ்சள் பயிரில் வேர் அழுகல் மற்றும் இலை கருகல் நோய் தாக்குவதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் பேசில்லஸ் சப்டிலஸ் என்ற எதிர் உயிர் பூஞ்சாண மற்றும் பாக்டீயாக் கொல்லிகளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து வேரில் ஊற்றவும். மேலும் இந்நோய் பாதித்த வயல்களில் புரோப்பிகோனசோல் என்ற இரசாயன பூஞ்சாணக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி வீதம் கலந்து நன்கு நனையும் படி வேரில் ஊற்றவும்.

**ஆமணக்கு**

தற்போது சாகுபடி செய்துள்ள ஆமணக்கு பயிரில் பூ பூக்க துவங்கியுள்ளது. எனவே, ஆமணக்கு விவசாயிகள், பெண் பூக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, குலைகளில் காய்கள் அடர்த்தியாக பிடித்து, மகசூல் அதிகரிக்கவும் ஆமணக்கு கோல்டு என்ற வளர்ச்சியூக்கியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மி.லி மற்றும் ஒட்டும் திரவம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி என்ற அளவில் கலந்து பூங்கொத்தின் மீது நன்கு படும்படி காலை அல்லது மாலை நேரங்களில் விதைத்த 25 மற்றும் 60வது நாட்களில் என இரண்டு முறை தெளிப்பு செய்ய வேண்டும்.

### கரும்பு

தற்பொழுது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலை மற்றும் உயிரியல் காரணிகளால் கரும்பில் பொக்கா போயிங் என்ற நோயின் தாக்குதல் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அதிகரித்து வருகிறது. இந்நோயின் முக்கிய அறிகுறியானது இளம் இலைகள் திருகி, வளர்ச்சி குன்றியும், கணுவிடைப்பகுதி குறுகியும் சிறுத்தும் குட்டையாக காணப்படும். 3 முதல் 7 மாத வயதுடைய பயிர்கள் அதிகம் பாதிக்கக்கூடியது. மேலும் இது காற்றின் மூலம் பரவும் நோயாகும். இந்நோயைக் கட்டுப்படுத்த நடவு செய்வதற்கு முன்பு 0.1 % புரோப்பிகோனசோல் 25 % இசி (1 மி.லி/லிட்டர் தண்ணீர்) + இமிடாகுளோபிரிட் 70 WS (1 மி.லி/லிட்டர் தண்ணீர்) கலந்து 20 நிமிடங்கள் நனைத்து கரணை நேர்த்தி செய்ய வேண்டும் அல்லது அறிகுறி தென்பட்டவுடன் புரோப்பிகோனசோல் 25 % இசி (1 மி.லி/லிட்டர் தண்ணீர்) + இமிடாகுளோபிரிட் 17.8% SL (0.4 மி.லி/லிட்டர் தண்ணீர்) + ஒட்டும் திரவம் (1 மி.லி/லிட்டர் தண்ணீர்) கலந்து இலைவழியாக தெளிக்கவும்.

### கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை

பகல்நேர வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், விவசாயிகள் மாடு மற்றும் ஆடுகளின் பால் உற்பத்தி மற்றும் உடல் எடை குறையாமல் இருப்பதற்கு அடர்தீவனம் மற்றும் பசுந்தீவனம் போதுமான அளவு அளிக்க வேண்டும்.

செரிமானத்தின் போது உருவாகும் வெப்பத்தைக் குறைக்க, உயர்தர தீவனத்தையும் அளிக்க வேண்டும். அதாவது, அதிக நார்ச்சத்து கொண்ட தீவனங்களைக் குறைத்து, எளிதில் செரிக்கும், ஊட்டச்சத்து நிறைந்த தீவனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

கலப்பு தீவனத்தை மலிவான தீவன மூலப்பொருட்களாக வாங்கி, அதன் மூலம் எளிய முறையில் தயாரிக்கலாம்.

10 கிலோ கலப்பு தீவனத்தில் 4 கிலோ தானியங்கள் (சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி) மற்றும் 3 கிலோ புண்ணாக்கு வகைகள் (கடலை, சோயா), 2.75 கிலோ அரிசித்தவிடு, 200 கிராம் தாது உப்புக்கலவை, 50 கிராம் சமையல் சோடா சேர்த்து அருகில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரத்தில் அரைத்து 3 - 4 வாரங்களுக்கு சேமித்து வைத்து கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

பசுந்தீவனம் கிடைக்காத சமயங்களில் காய்ந்த அல்லது பச்சையாக உள்ள மர இலைகளை பயன்படுத்தலாம்.

தற்போதைய திடீர் வெப்பநிலை உயர்வு கால்நடைகளில் தண்ணீர் தாகத்தை ஏற்படுத்தும். எனவே கால்நடைகளுக்கு எப்போதும் தண்ணீர் தங்கு தடையின்றி கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர் - 636 203, சேலம் மாவட்டம். தொடர்புக்கு : 0427 - 2422550.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# தமிழகத்திற்கு எல்-நினோ என்ன தரப்போகிறது?



ஆடி பட்டம் தேடி விதை என்பது பழமொழி. ஆனால் இந்த ஆண்டு விதை தேடும் காலத்திலேயே தமிழக விவசாயிகளின் பார்வை வானத்தை நோக்கி திரும்பி இருக்கிறது. காரணம் மழையை எதிர்பார்க்கும் நிலை தான் தற்போது. இந்தியாவில் தென்மேற்கு பருவமழையின் போக்கு இந்த ஆண்டு கவலையளிப்பதாக உள்ளது. தென் மாநிலங்களில், மழைப்பொழிவு இயல்பை விட குறைவாகவே உள்ளது.

வழக்கமாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை ஜூன் 12ந் தேதி திறப்பது வழக்கம். இந்த ஆண்டில் போதிய நீர் இல்லாத காரணத்தால் அணை திறக்க வில்லை. இதனால் டெல்டா மாவட்டங்களில் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடக்கவில்லை. இதற்கான பின்னணியில் இருப்பது எல்–நினோ என்பது குறிப்பிடத்தக்கது.

**எல்–நினோ (EL-NINO) பெயர் எப்படி வந்தது தெரியுமா?**

எல்–நினோ என்ற பெயருக்கு பின்னால் ஒரு சுவாரஸ்யமான வரலாறு இருக்கிறது. தெரியுமா?

பெரு நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் பல ஆண்டுகளாக கடலில் ஏற்படும் மாற்றங்களை கவனித்து வந்தனர்.

கிருஸ்துமஸ் காலகட்டத்தில் கடலின் மேற்பரப்பு நீர் வழக்கத்தை விட வெப்பமாக மாறுவதையும், அதன் பிறகு மீன்களின் வரத்து குறைவாக இருப்பதையும் கவனித்து வந்தனர். அதுவும் இந்த மாதிரியான நிகழ்வு கிருஸ்துமஸ் பண்டிகை காலத்தில் ஏற்படுவதால், ஸ்பானிஷ் மொழியில்

இதற்கு எல்-நினோ என பெயர் வைத்தனர். எல்-நினோ என்ப தற்கு குழந்தை (BABY) என்று அர்த்தம். இதுவே காலப்போக்கில் இந்த பெயர் பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் குறிப்பிட்ட கடல் வளிமண்டல மாற்றத்தை குறிக்கும் பெயராக மாறிவிட்டது.

**கடலில் என்ன மாற்றம் நடக்கிறது?**

பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் வடக்கு பகுதியில் கடல் மேற்பரப்பு நீர் வழக்கத்தைவிட அதிகமாக வெப்ப நிலை உருவாகுவதை எல்நினோ என்கிறோம். கடலில் ஏற்படும் மாற்றம் கடலோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. இந்த மாற்றம் மழை பெய்யும் அளவையும் இடங்களையும் பாதிக்கிறது. கடலின் மேற்பரப்பு நீர் வழக்கத்திற்கு மாறாக 1 1/2 டிகிரி செல்சியஸ் வெப்ப மடையும் போது ஏற்படும் நிகழ்வு தான் எல்-நினோ. அதுவே 2 டிகிரியாக வெப்பநிலை எட்டினால் அது சூப்பர் எல்நினோ.

**தமிழகத்தில் எல்-நினோவால் உண்டாகும் பாதிப்பு?**

தமிழகத்தில் 12 மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், திருச்சி, திருப்புத்தூர், வேலூர், இராமநாத புரம், விருதுநகர்) அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும். வறட்சி, குடிநீர் பிரச்சனை உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளன. இதற்கான தொழில்நுட்ப பயிர் திட்டங் களை தமிழக வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) தயாரித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறது. தமிழக அரசும் எல்-நினோ பாதிப்பை கண்டறிய நிபுணர்கள் குழுவை அமைத்து கண்காணித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தை பொருத்தவரை மழை குறைவாக பெய்தாலும் பிரச்சனை தான், அதிகமாக பெய்தாலும் பிரச்சனை தான். நிறைய பாதிப்புகள் விவசாயத்தில் ஏற்படும். விவசாயம் என்பது ஒரு சூதாட்டம் போல. வெற்றியா தோல்வியா என்பதை கடைசி வரை தெரிந்த கொள்ள முடியாத நிலை. பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் ஒரு வெப்ப மாற்றம் ஆயிரக்கணக்கான கி.மீ தொலைவில் உள்ள தமிழகத்தையும் விவசாயத்தையும் பாதிக்க கூடிய நிலை தான். இதனால் பல உலக நாடுகளில் உணவு பஞ்சம் ஏற்படும் என்ற அச்சம் உள்ளது. எனவே தமிழக விவசாயிகள் இந்த எல்-நினோ காலகட்டத்தை ஒரு சவாலான நிகழ்வாக எடுத்துக் கொள்ள வேண்டும். அரசு வழங்கும் நெறிமுறைகளை வழிகாட்டலை பின்பற்ற வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயிர் பல்வகைப்படுத்துதல் பயிற்சி



சேலம், ஆக.19

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டாரம், வை.தாதனூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சியானது பயிர் பல்வகைப் படுத்துதல் என்ற தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா முன்னிலையில் நடைபெற்றது.

உதவி தொழில்நுட்ப மேலாளர் மா.தமிழ்ச்செல்வி, விவசாயி களை வரவேற்று பயிற்சியின் நோக்கம் குறித்து எடுத்துக் கூறினார். தர்மபுரி மாவட்டம் மரபு வழி இயற்கை பண்ணை ஆசிரியர் சஞ்சீவ பெருமாள், பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிர் பல்வகைப்படுத்துதலில் பயிர் சுழற்சி, கலப்பு பயிர்கள், நவதானிய பயிர்கள் விதைத்து, பயிர் செய்து மடக்கி உழும் படியும் மற்றும் உயர் மதிப்பு பயிர்கள் சாகுபடி குறித்தும் இதன் மூலம் அதிக வருமானம் நிலையான வருமானம் பெறும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்தார். மேலும் பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர் சாகுபடி ஆகியவை மண்ணில் ஊட்டச் சத்துக்களை மீட்டு எடுக்கின்றன என்றும் விளக்கம் அளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, பயிறு வகை பயிர்கள் நைட்ரஜனை நிலை நிறுத்துவதால் உர தேவை குறைகிறது என்றும் உளுந்து பயிரில் உயிர் உர விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, மண் பரிசோதனை செய்து உரமிடும் படியும் சமச்சீர் உர பயன்பாடு குறித்தும் இயற்கை உரங்களை பயன்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், விவசாயிகள் அடையாள எண் முக்கியத்துவம், சொட்டுநீர் பாசனம் குறித்தும் மற்றும் வேளாண்மை துறையின் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். பயிற்சியில் மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செல்வி, தமிழ்ச்செல்வி மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நவீன வேளாண்மையில் மல்லிகை பூவிலிருந்து செண்ட் தயாரிக்கும் முறை

மல்லிகை மலர்களின் வாசைன தொன்றுதொட்டு இலக்கியங்களில் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

மல்லிகையில் இருந்த தயாரிக்கப்படும் நறுமண எண்ணெய் மேற்கத்திய நாடுகளில் வாசைன திரவியங்கள் தயாரிக்க ஒரு முக்கிய மூலப் பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த எண்ணெய்க்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் ஹாலாந்து ரஷ்யா ஆகிய நாடுகளில் ஏகப்பட்ட வரவேற்பு உள்ளது. விலை உயர்ந்த சென்ட்களில் மல்லிகையின் வாசைன மெழுகு மற்றும் மல்லிகை தெளிவு பயன்படுத்தப்படுகிறது. வாசைன மெழுகில் மல்லிகை மலர்களில் உள்ள மெழுகு மற்றும் நிறமிகள் கலந்திருக்கும். மல்லிகைத் தெளிவு என்பது வாசைன மெழுகில் இருந்து தயாரிக்கப்படும் எந்த தெளிவு கலக்கப்பட்டிருக்கும்.

நம் நாட்டில் மட்டும் மல்லிகை பிரிவை சேர்ந்த மலர்களில் 40 வகைகள் பயிராகின்றன. இவற்றில் மல்லிகை,முல்லை, பிச்சி ஆகிய மூன்றும் அதிக நறுமணம்மிக்கது. இவற்றில் பிச்சி, அதிக வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிராகிறது. தென்னந்தியாவை மட்டும் எடுத்துக் கொண்டால் சுமார் 12,000 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பிச்சியில் உள்ள நறுமண எண்ணெய் வெளிநாடுகளில் அதிக வரவேற்பை பெற்றுள்ளது. பிச்சி நறுமண எண்ணெய் தயாரிப்பதற்காக மட்டும் அதிக அளவில் பிரான்ஸ் சிரியா அல்ஜீரியா மொராக்கோ மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் பயிர் செய்யப்படுகிறது. பிச்சியில் ஒரு எக்டரில் இருந்து 8 முதல் 10 டன் வரை மலர்கள் உற்பத்தியாகின்றன. இம்மலரிலிருந்து நாம் வாசைன எண்ணெய் தயாரித்தால் அதிக அளவு அன்னிய செலவாணியை பெறலாம். ஆனால் நம் நாட்டில் வாசைன எண்ணெய் தயாரிப்புக்கு 0.5 முதல் 1 சதம் மலர்களே பயன்படுத்தப்படுகிறது. மீதி எல்லாம் மாலை கட்டுவதற்கும், தலை அலங்காரங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இன்று உலகில் வாசைன மெழுகின் மொத்த உற்பத்தி ஒரு வருடத்திற்கு 20 டன்களாக இருக்கிறது. இவற்றில் இந்தியாவில் அதிக பரப்பளவில் பிச்சி மற்றும் மல்லிகை மலர்கள் சாகுபடி செய்தாலும் நம் நாட்டின் வாசைன மெழுகு உற்பததி 2 டன்களாக மட்டுமே இருக்கிறது. உலகளவில் துருக்கி ஜப்பான் சீனா எகிப்து மொராக்கோ ப்ரான்ஸ் ஆகிய நாடுகளில் மல்லிகையில் மெழுகு

உற்பத்தி செய்யப்படுகிறது. எகிப்து நாடு வாசைன எண்ணெய் தயாரிப்பில் முதலிடத்தில் இருக்கிறது.

**வாசைன எண்ணெய் மற்றும் மெழுகு தயாரிக்கும் முறை**

பண்டைக்காலங்களில் வாசைன எண்ணெய் தயாரிக்க நீராவி வடித்தல் முறையே பின்பற்றப்படுகிறது. ஏனென்றால் அதிக வெப்பத்தில் இந்த வாசைன பொருட்கள் பூவிலிருந்து பிரித்தெடுக் கப்படுகிறது. பிரித்தெடுக்கப்பட்ட பொருட்கள் நீராவியுடன் கலக்கும். இந்த நீராவியை குளிர்வித்தால் வாசைன எண்ணெயை பிரித்தெடுக்கலாம் ஆனால் இம்முறையில் சில சமயம் வாசனை எண்ணெய் ஆவியாதல் மூலம் வீணாகிறது. எனவே அங்கக கரைசல்கள் பயன்படுத்தி வாசைன எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

**கொழுப்பிலிருந்து பிரித்தெடுத்தல்**

புதிதாக பறிக்கப்பட்ட மலர்களை சுத்திகரிக்கப்பட்ட கொழுப்பு படிமங்கள் மேல் அடுக்கி மேல் அடுக்கி வைக்க வேண்டும். இவ்வாறு பல அடுக்குகளில் ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து மலரையும், கொழுப்பு பொருளையும் அடுக்க வேண்டும். மலர்கள் வெளியிடுகின்ற வாசனைப் பொருட்களை அந்த கொழுப்பு கிரகித்து கொள்ளும் ஒரு நாள் கழித்து இந்த மலர்களை அப்புறப்படுத்தி விட்டு புதிய மலர்களை அடுக்க வேண்டும். கொழுப்பு படிமங்கள் வாசைன திரவியத்தால் நனைந்து விடும். இந்த கொழுப்பை உருக்கி பின்னர் திட பொருளாக்கி எரிசாராயத்தால் கலக்கும் போது வாசனைப் பொருட்கள் எரிசாராயத்தில் கலந்துவிடும். பின்னர் சாராயத்தை குறைந்த வெப்ப நிலையில் வெற்றிட வடித்தல் முறை மூலம் பிரித்தெடுத்தால் நறுமண எண்ணெய் கிடைக்கும். இந்த முறையில் எண்ணெய் அதிகம் கிடைக்கும். ஆனால் அதிக நேரம் அதிக வேலையாட்கள், கடினமான முறைகள் ஆகியவற்றால் இம்முறை அதிகம் கடைபிடிக்கப்படவில்லை.

**கரைசல்கள் மூலம் பிரித்தெடுத்தல்**

இம்முறையில் மலர்கள் பெரிய பிரித்தெடுக்கும் கலனில் வைக்கப்படும். மலருடன் ஹெக்ஸேன் போன்ற அங்க கரைசல்கள் கலக்கப்படும். இதனால் மலரில் உள்ள வாசனைப் பொருட்கள் அங்கக கரைசல்களில் கலக்கும். இந்த வாசனைப் பொருட்கள் கலந்த அங்கக கரைசல்களை வெற்றிட வடித்தல் முறையில் வடிக்கும் போது கரைசல்களை வெற்றிட வடித்தல் முறையில் வடிக்கும் போது கரைசல்கள் எளிதில் ஆவியாக பிரித்தெடுக்கப் படும். அடியில் தங்கும் பொருள் தான் வாசனை மெழுகு. இம்முறையில் வடித்தெடுக்கப்பட்ட அங்க கரைசல்களை திரும்ப பெறும் வசதிகளும் உண்டு.

இம்முறையின் மூலம் 100 கிலோ மலரில் இருந்து 250 முதல் 340 கிராம் வரை வாசனை மெழுகு பெறலாம். வாசனை பொருட்கள் கலந்த அங்கக கரைசலில் இருந்து மெழுகை மீட்டு எடுப்பதற்கு இரண்டு முறைகள் உண்டு. ஒன்று சுற்றி அசைத்து பிரித்தெடுக்கும் முறை இன்னொன்று அசைவில்லாமல் பிரித் தெடுக்கும் முறை தசைவில்லாமல் பிரித்தெடுக்கும் முறையில் சேதமில்லாமல் அதிக அளவு மற்றும் அதிக தரம் கொண்ட வாசனை மெழுகு கிடைக்கும். வாசனை மெழுகில் மலரில் உள்ள வாசனை பொருட்கள் மெழுகுகள் ஆகியன கலந்திருக்கும்.

தகவல் : **யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.**




# பார்த்தீனியம் களைச்செடி ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி




பெரம்பலூர், ஆக.19

தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் சார்பில், பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டபுரம் கிராமத்தில் பார்த்தீனியம் களைச்செடி ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 17.08.26 மற்றும் 18.08.26 ஆகிய இரு நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ரோவர் கல்விக் குழும மேலாண்மைத் தலைவர் முனைவர் வரதராஜன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் மற்றும் இயக்குநர் முனைவர் வஹாப் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். அவர்கள் உரையில், விவசாய நிலங்கள் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் களைச்செடிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து கட்டுப் படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

பார்த்தீனியம் களைச்செடியின் அடையாளம், அதன் பாதிப்புகள் மற்றும் களை மேலாண்மை முறைகள் குறித்து தோட்டக்கலைத் துறை உதவிப் பேராசிரியர்கள் ராமதாஸ் மற்றும் வினோத் மணி ஆகியோர் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, வாலிகண்டபுரம் கிராமத்தில் காணப்பட்ட பார்த்தீனியம் களைச்செடிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அனைவரும் ஒருங்கிணைந்து பார்த்தீனியம் செடிகளை அகற்றி, அவற்றை முறையாக அப்புறப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.

# இல்லங்களில் உயிர் வாயு கலனைப் பயன்படுத்துவன் முக்கியத்துவத்தை விளக்கிய வேளாண் மாணவர்கள்

ஈரோடு, ஆக.19

ஈரோடு மாவட்ட ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் லேகா ஸ்ரீ, ஆனந்தி, திருஷாத்தா, நதியா, நீஷா பார்ஜோ, கவி வர்ஷினி ஆகியோர் விவசாயிகளின் தங்களது இல்லங்களில் உயிர்வாயு கலனைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், செயல்படும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. கால்நடைகளின் சாணம் மற்றும் வீட்டில் கிடைக்கும் மட்கக்கூடிய கழிவுகளைப் பயன்படுத்தி உயிர்வாயுவை உற்பத்தி செய்து, சமையலுக்குத் தேவையான எரிபொருளாகப் பயன்படுத்தும் முறைகள் விளக்கப்பட்டன.



உயிர்வாயு கலனை முறையாகப் பராமரித்தல், தேவையான மூலப்பொருட்களைச் சேர்த்தல் மற்றும் தொடர்ந்து உயிர் வாயுவைப் பெறும் முறைகள் குறித்து எடுத்து கூறப்பட்டது. இதன் மூலம் எரிபொருள் செலவைக் குறைப்பதுடன், வீட்டுக் கழிவுகளைப் பயனுள்ள முறையில் மாற்றி சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்க முடியும் என விளக்கப்பட்டது. மேலும், உயிர்வாயு தயாரிப்பிற்குப் பின் கிடைக்கும் கழிவை இயற்கை உரமாகப் பயன்படுத்தி மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, நிலையான வாழ்க்கை முறையை மேம்படுத்த முடியும் என மாணவர்கள் வலியுறுத்தினர். விவசாயிகள் தங்கள் இல்லங்களில் உயிர்வாயு கலனைப் பயன்படுத்துவதுடன், அதன் பயன்களை மற்ற விவசாயிகளுக்கும் எடுத்துரைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகளைப் பின்பற்ற முன்வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

# நானோ விழிப்புணர்வு முகாம்

தஞ்சாவூர், ஆக.19

தஞ்சாவூர் மாவட்டம், கீழையூர் கிராமத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சி இப்கோ கள அதிகாரி திரு மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது. மண் பாதுகாப்பு, சமச்சீர் உர மேலாண்மை மற்றும் நெல் சாகுபடியில் இப்கோ நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, சாகரிக்கா உரங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. குருணை யூரியா பயன்பாட்டைத் தவிர்த்து, நானோ உரங்கள் மற்றும் உயிர் உரங்களைப் பயன்படுத்தி நிலையான ஊட்டச்சத்து மேலாண்மையைப் பின்பற்ற விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர்.

மேலும் உர விற்பனையாளர் ராஜ்குமார், இப்கோ கள அதிகாரி பாரதி மற்றும் பஜார் சேல்ஸ்மேன் ராகுல் ஆகியோர் நானோ உரங்களின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர்.

# சம்பா பருவத்துக்கு உகந்த நெல் விதைகளை மட்டுமே விற்பனை செய்ய அறிவுறுத்தல்


புதுக்கோட்டை, ஆக.19

சம்பா பருவத்துக்கு உகந்த நெல் விதைகளை மட்டுமே விற்பனை செய்ய புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் சுஜாதா தனியார் விதை விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி செய்யும் பணிகளில் விவசாயிகள் தற்போது தயாராகி வருகிறார்கள். இந்நிலையில், தனியார் விதை விற்பனையாளர்கள் சான்று விதை

களில் இரு அட்டைகள் (வெள்ளை அல்லது நீலநிறம்) முறையே சான்று அட்டை மற்றும் விவர அட்டை பொருத்தப்பட்ட விதை களையே விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். விவர அட்டையில் பயிர், ரகம், குவியல் எண், காலாவதி நாள், பயிர் செய்ய ஏற்ற பருவம் உள்ளிட்ட 14 வகையான விவரங்கள் விதை சட்ட விதிகளின்படி கட்டாயம் அச்சிடப்பட்டு இருக்க வேண்டும். அனைத்து தனியார் விதை விற்பனையாளர்களும், விதை இருப்பு பதிவேடு, கொள்முதல் இன்வாய்ஸ் மற்றும் முளைப்பு அறிக்கை கட்டாயம் பராமரிக்கபட வேண்டும். குவியல் வாரியாக தனித்தனி பக்கங்களில் விதை இருப்பு விவரங்கள் பதிவிட வேண்டும். சம்பா பருவத்துக்கு உகந்த தரமான நெல் விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். நடப்பு சம்பா பருவத்தில் 150 முதல் 160 நாட்கள் வயதுடைய நீண்ட கால நெல் இரகங்கள் ஏற்றவையாகும். நீண்ட கால இரகங்கள் ஆன சாவித்ரி (சி ஆர் 1009), சி ஆர் 1009 சப் 1 மற்றும் ஏடிடீ 51 போன்ற ரகங்கள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

அதற்கு பின்னர், தொடர்ந்து மத்திய கால நெல் இரகங்கள் ஆன ஏடிடீ 38, ஏடிடீ 39, ஏடிடீ 54, ஏடிடீ 46, வெள்ளைப் பொன்னி, ஐஆர் 20, கோ 43, கோ 46, கோ 50 மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி போன்ற ரகங்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். வெளிமாநில நாள் ரகங்கள் ஆன பிபீடி 5204, எம்டியூ 1262, எம்டியூ 1224,என்எல்ஆர் 34449, கேஎன்எம் 1638 போன்ற விதைகளை விற்பனை செய்யும் போது விற்பனையாளர்கள் படிவம் 2 கட்டாயம் வைத்திருக்க வேண்டும். தனியார் விதை விற்பனை யாளர்கள் விதைகளை விற்பனை செய்யும் போது விவசாயி களுக்கு கட்டாயம் ரசீது வழங்க வேண்டும். விற்பனை ரசீதில் விவ சாயி மற்றும் குவியல் விவரங்கள் அவசியம் குறிப்பிட வேண்டும். நீண்ட கால மற்றும் மத்திய கால நெல் இரகங்கள் 925 மெ.ட விதை தனியார் விதை விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு இருப்பு வைக்கப்பட்டு உள்ள விதைகளின் முளைப்புதிறனை உறுதி செய்யும் வகையில் புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி விதை ஆய்வாளர்களால் அலுவலக விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலையத்திற்கு முளைப்புதிறன் பரிசோதனை மேற் கொள்ள அனுப்பபட்டு வருகிறது. எனவே, சம்பா பருவத்துக்கு ஏற்ற நெல் ரகங்களை மட்டுமே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய அறிவுறுத்தப்படுகிறது. இந்நிலையில், சம்பா பருவத்துக்கு உகந்தது அல்லாத நெல் ரகங்களை விற்பனை செய்தாலோ, விதை சட்ட விதிகளைப் பின்பற்றாமலோ விற்பனை செய்தால், விதை சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை கட்டுப்பாடு ஆணை 1983ன் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குனர் சுஜாதா செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# குறுங்குளம் கிராமத்தில் ‘கிசான் கால் சென்டர்’ விழிப்புணர்வு பயிற்சியை நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



தஞ்சாவூர், ஆக.19

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் குறுங்குளத்தில் விவசாயிகளுக்கு ‘கிசான் கால் சென்டர்’ (Kisan Call Centre – KCC) சேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 1800-180-1551 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம் விவசாயிகள் பயிர் சாகுபடி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, உரப் பயன்பாடு, வானிலை, சந்தை நிலவரம் மற்றும் அரசு வேளாண் திட்டங்கள் தொடர்பான சந்தேகங் களுக்கு வேளாண் வல்லுநர்களிடம் ஆலோசனை பெறலாம் என மாணவிகள் விளக்கினர். மேலும், இச்சேவை தினமும் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுவதையும், தமிழ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் ஆலோசனை பெறும் வசதி உள்ளதையும் எடுத்துரைத்தனர்.

விவசாயிகள் தங்களது வேளாண் சந்தேகங்களுக்கு நேரடியாக தொலைபேசி மூலம் தீர்வு பெறும் முறையை மாணவிகள் செயல்விளக்கத்துடன் எடுத்துக் காட்டினர். இதன் மூலம் வீட்டிலிருந்தபடியே வேளாண் வல்லுநர்களின் ஆலோ சனையை இலவசமாகப் பெறும் வசதி குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டனர்.

# மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, ஆக.19

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பாண்டில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (மக்காச்சோளம்) மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (மக்காச்சோளம்) ஆகிய திட்டங்கள் மூலம் செயல்விளக்கத் திடல்கள் மற்றும் மானிய விலையில் மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் விநியோகம் செய்யப்பட உள்ளது என கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

மக்காச்சோள செயல்விளக்கத்திடல் அமைத்திட ஒரு எக்டேருக்கு HTMH-5402 இரக மக்காச்சோள விதை 15 கிலோ, நுண்ணூட்டக்கலவை 12.5 கிலோ, திரவ உயிர் உரம் 1 லிட்டர், பயிர் வளர்ச்சி ஊக்கி 15 கிலோ மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் 4 கிலோ ஆகியவற்றிற்கு ரூ.11500 மானியம் வழங்கப்பட உள்ளது.

மேலும், பொதுவி நியோக திட்டத்தில் HTMH-5402 இரக மக்காச்சோள விதைகள் ஒரு ஹெக்டேருக்கு 15 கிலோ வீதம், கிலோவிற்கு 100 ரூபாய் மானியத்தில் விநியோகம் செய்யப் படுகிறது மற்றும் நுண்ணூட்டச்சத்து விநியோகத்திற்கு ஒரு எக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்டக்கலவை, 1 லிட்டர் திரவ உயிர் உரம் மற்றும் 4 கிலோ உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் ஆகிய இடுபொருட்கள் 50% மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது.

மேற்படி திட்டங்களுக்கான மக்காச்சோள விதைகள் மற்றும் இடுபொருட்கள் கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப் படும் விவசாயிகள் தங்களது ஆதார் நகல், சிட்டா நகல் மற்றும் தேவையான ஆவணங்களுடன் வேளாண்மை விரிவாக்க

மையத்தை அணுகி திட்ட பலன்களை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகள் மக்காச்சோள சாகுபடியில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள், உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளைப் பின்பற்றி அதிக மகசூல் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தரமான மக்காச்சோள விதைகள் மற்றும் இடுபொருட்களைப் பெற்று பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

